★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)
மலர் 25 ஆடி 29 ஜுலை 4 இதழ் 182
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14—8—83

## தி. மு. க. வெளிநடப்பு!

(புதுடில்லி)

புதுடில்லி பாராளுமன்றத்தில் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்ட அறிக்கையைக் கண்டித்து தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இலங்கை கலவரங்கள் தொடர்பாக இந்திய லோக சபை (பாராளுமன்றம்) கண்டனத்தீர்மானம் நிறைவேற்றுததைக் கண்டித்து தி. மு. க. உறுப்பினர்கள் முன்னரும் வெளிநடப்புச் செய்திருந்தனர்

## "ஐ. நா. சமாதானப்படை இங்கு அனுப்புக"
### கூட்டணி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்குச் சர்வதேச சமாதானப்படையொன்றை அனுப்பிவைக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகவலை அகில இந்திய வானொலி அறிவித்திருந்தது.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆகியோர் ஐ நா. செயலாளர் நாயகத்திற்கு அனுப்பியுள்ள தந்தியில், இலங்கையிலுள்ள தமிழர்களின் உயிர்களைப் பாதுகாக்க ஐ. நா. தலையிடவேண்டும் என்றும் அத்தந்தியில் கோரியுள்ளனர். (க)

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## ★ 'தனிநாடு' கோரிக்கை கைவிடப்படுமானால்
# சிறையிலுள்ளவர்களை விடுவிக்க
# பேச்சு ஆரம்பிக்கலாம்"

### ஜனாதிபதி தெரிவித்ததாக இந்திராவிடம் தகவல்

(கொழும்பு)

**"தனிநாடுகோரிக்கை கைவிடப்படுமானால் சிறைச்சாலைகளில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படாத நிலையிலுள்ளவர்களையும், விசாரணைக்காகக் காத்திருப்பவர்களையும் விடுதலை செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும்"**

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளதாக அவரது விசேட பிரதிநிதியாகப் புதுடில்லி சென்ற திரு. எச். டபிள்யு. ஜெயவர்த்தன கியூ. ஸி. இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியிடம் தெரிவித்தார்.

இத்தகவலை இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி லோகசபாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திருமதி இந்திராகாந்தி லோகசபையில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: வட்டமேசைமகாநாட்டின்போது தமிழ்மொழி தேசிய அந்தஸ்து உபயோகம், வடக்கிலிருந்து ஆயுதப்படைகளை வாபஸ்பெறுதல், மாவட்ட சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்கி அமுல்ப் படுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் ஆகிய விடயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்றும் தெரிவித்தார். (வெ)

## எழும்பூர் ரயில் நிலையத்தில் இலங்கை அகதிகள் முகாம்!

சென்னை, ஆக. 15

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் (எக்மோர்) இலங்கை அகதிகளுக்கென அகதிகள் முகாம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் இலங்கையிலிருந்து வரும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கும், இந்திய வம்சாவழித்தமிழ் மக்களுக்கும் தகுந்தசேவைகள் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழகத்தின் பல பாகங்களில் இலங்கை மக்கள் புனர்வாழ்வுக்கு நிதி சேகரிக்கும்பணி தீவிரமடைந்துள்ளது. தொழிற்சாலைகள். காரியாலயங்கள், என்பனவற்றில் கடமைபுரிபவர்கள் பலர் தமது ஒருநாள் சம்பளம், ஒரு மாதச்சம்பளம் ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

இத்துடன் பலதொழில் அதிபர்கள், மற்றும் பிரமுகர்களும் தாராள நிதியுதவி செய்து வருகின்றனர். (கி)

### இலங்கையில் பாதிக்கப்பட்டவர்க்கு
## இந்தியப்பிரதமர் தலைமையில் துயர் துடைப்புக் குழு!
### ஒரு கோடி ரூபாவுடன் நிதியமும் ஆரம்பம்

(புதுடில்லி)

இலங்கையில் அண்மையில் இடம் பெற்ற கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் துயர்துடைக்கவென இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தலைமையில் குழுஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் துயர் துடைப்பு நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிதியத்திற்கு பிரதமர் துயர் துடைப்பு நிதியத்திலிருந்து ஒருகோடி ரூபாவை வழங்கி நிதியத்தை ஆரம்பித்துவைத்தார்.

இத்தகவல்களை இந்தியப் பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் உறுப்பினர்களின் பலத்த ஆரவாரத்திடையே அறிவித்த இந்தியப் பிரதமர் திருமதி காந்தி, இந்நிதியத்திற்கு இந்திய மக்களும், வெளிநாடுகளிலுள்ள இந்திய பிரஜைகளும் தாராளமாக வாரி வழங்குமாறு கோரினார்.

## ★ இலங்கைத் தமிழர் பிரச்னை:
# வட்டமேசை மகாநாட்டுக்கு இந்தியா ஆதரவு வழங்கும்
### லோக்சபாவில் இந்திரா அறிக்கை

புதுடில்லி, ஆக. 13

"தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இலங்கைத்தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் வட்டமேசை மகாநாடொன்றில் கலந்து கொள்வதை இலங்கை ஜனாதிபதி விரும்புகிறார். இதற்கு இந்தியாவும் ஆதரவு தெரிவிக்கின்றது. அத்துடன் இந்த வட்டமேசை மகாநாடு பூரண வெற்றிபெறவும் இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்கும்."

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று முன்தினம் இந்திய லோக்சபாவில் இலங்கை அரசின்விசேட பிரதிநிதி திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தனவுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விபரங்கள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திருமதி. காந்தியின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இலங்கையின் சுதந்திரம், ஐக்கியம், தன்னாதிக்கம் ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில்

(6-ம் பக்கம் பார்க்க)

## "கொழும்பு அகதிகளைக் கவரவே யாழ். நகரில் சுவரொட்டிகள்"
### டக்ளஸ் லியனகே தகவல்

(கொழும்பு)

"கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுள்ள அகதிகளைக் கவரும் விதத்திலேயே யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன" என்று ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு டக்ளஸ் லியனகே தெரிவித்தார்.

நேற்று அவர் செய்தி நிருபர்கள் மகாநாடொன்றை நடத்தினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொழும்பில் பாதிக்கப்பட்டு தற்போது யாழ்ப்பாணம் சென்றுள்ள அகதிகளைக் கவரும் விதத்திலேயேயாழ்ப்பாண நகர்ப் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அச் சுவரொட்டிகளை நன்குஆராய்ந்தால் இது புரியும்.

யாழ்ப்பாணச் சுவரொட்டிகள் சிலவற்றில் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் வகையில் ஒரு சில திகதிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத் திகதிகளில் ஆகஸ்ட் 15 என்றும், செப்டம்பரில் சில திகதிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன" என்றார். (கி)

## தமிழக 'ராஜ்பவன்' விருந்துபசாரம் ரத்து!

சென்னை ஆக. 13

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு ஆளுநரின் இல்லமான 'ராஜ்பவனில்' நடத்தப்படவிருந்த ராஜாங்க விருந்துபசாரம் இம்முறை ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தே இந்த விருந்து உபசாரம் ரத்துச்செய்யப்பட்டது.

தமிழக ஆளுநர் இம்மாநிலத்தின் அரசியல் பிரமுகர்கள், முக்கிய பிரஜைகள், அரசாங்க உயர்அதிகாரிகளுக்கு இந்த விருந்துபசாரத்தை வழங்குவது நீண்டகாலப் பாரம்பரியமாக இருந்து வருகின்றது.

இதேவேளை தமிழக ஆளுநர் திரு. குரானா இலங்கை மக்கள் நிவாரண நிதிக்கு தமது ஒரு மாதச் சம்பளப் பணத்தை வழங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் 50 குடும்பங்கள்

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து அகதிகளாக வந்து சேர்ந்த சுமார் 50 குடும்பங்கள் இங்குள்ள சென், திரேசா தேவாலயத்தில் தங்கியிருக்கிறார்கள்.

வண. பிதா பயஸ் அடிகள் அகதிகளை வரவேற்று அவர்களைக் கவனிக்கிறார் அவர்களின் எதிர்காலம்பற்றி இன்று ஆலோசிக்கப்படவிருக்கிறது.

சமூகநல ஸ்தாபனங்கள் பல உதவிபுரிந்துவருகின்றன.

புதிய நவீன எலக்ரோனிக் யந்திரம் மூலம்
**போட்டோ பிரதிகளுக்கு**
**நியூவிக்ரேஸ்எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்**
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23532. [8187]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 80 வீதம் பாவனைக்குரிய மினிவான் டயர்கள். 700 × 15, 750 × 15 அளவுகளில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சிவபாலன் செல்வபதி நெல்லியடி கரவெட்டி தொலைபேசி-98 8195

வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. 22, சோமசுந்தரம் வழி, சுண்டிக்குளி. 8198

11 ஸ்ரீ (Audi) கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு: 22 சோமசுந்தரம் அவெனியூ சுண்டிக்குளி. 8197

2½ பரப்புக்குள்வீடு சகல வசதிகளுடன் நல்லூர்கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 13/1 நாயன்மார் வீதி, கச்சேரி ரோட்டு, நல்லூர். 8194

பளையில் தென்னம் தோட்டம்விற்பனைக்குண்டு. உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கும் உகந்த இடம் கிணறுகளும் உண்டு. முருகையா, அடம்பன். 8193

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதி மங்கையர்க்கரசி வித்தியாசாலைக்கருகாமையில் வீடு கட்டுவதற்கு வசதியான காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். வ. மயில்வாகனம் சட்டத்தரணி இல: 93 இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 8192

வெள்ளை நிற Toyota Town Ace வான் விற்பனைக்குண்டு. தொடர்பு; P. தருமராசா ஸ்ரான்லி கவுஸ் 95/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8199

சகல வசதியுடன் 3 பரப்புக் காணி வீட்டுடன் 16- கொன்வன்ற் வீதி, யாழ்ப்பாணம்- இரண்டாகப் பிரிக்கலாம். பார்வையிட்டபின் தொடர்பு கொள்க: பே. அல்போன்ஸ், 27, கதிட்றல் வீதி, யாழ்ப்பாணம். 8133

சாவகச்சேரி பஸ்நிலையம், பாடசாலை புகையிரத நிலையம், ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்பு காணி புதிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சார, தண்ணீர் வசதியுண்டு. ''பரம்ஸ்'' நியூமார்க்கட், சாவகச்சேரி, அல்லது ப.கனகரட்ணம், சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 8162

## விற்பனைக்கு

கோப்பாய் இராச வீதியில் திறந்த மறியல்சாலையடியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மின்சார வசதி உண்டு. தோட்டம் செய்யலாம், வீடும் கட்டலாம். பிரித்தும் கொடுக்கப்படும். க. சந்திரசேகரம், பிள்ளையார் கோவிலடி, கோப்பாய். 8124

(British Layland Flat Lorry) 27 ஸ்ரீ 1035 லெய்லண் தட்டு லொறி நீளமான செசி உடையது. துறைமுக வேலை கட்கும் மரம் ஏற்றுவதற்கும் உகந்தது. N. C. குருநாதர், 64/1, ஸ்ரேஷன் லேன், பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 8157

யாழ்ப்பாணம் நல்லூர் செம்மணிவீதி 98 ம் (38) இலக்கத்தில் கல்விக்கந்தோருக்கு முன்பாக வீடு கட்டுவதற்குரிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு நேரில் வரவும். 8166

யாழ்நகர் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. நேரில்வரவும். அ. குமாரசாமி, 39/10, மின்சார நிலையவீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 8170

## EDUCATION

I C M A- Explanatory Answers to questions of May 1983 Examination. Section A Rs. 30/- Section B Rs. 30/- Prof I Rs 45/-Vanniasingham, Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely, Jaffna. 8113

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை (592321726 V) 7-8-83 பகல் யாழ்—கிளிநொச்சி 'மாதா' மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும். அல்லது தகவல் தரவும். மாணிக்கம் தர்மலிங்கம், கொத்தியாவத்தை அல்வாய் வடக்கு, அல்வாய். 8191

வவுனியாவில் இருந்து 28-7-83 மினி பஸ்சில் 3-30 மணிக்கு யாழ்ப்பாணம் வரும் பொழுது கடை கணக்கு புத்தகங்கள் 3 தவறிவிட்டன. அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வேலணை மேற்கு, திரு. கே. என். ஐயாத்துரை என்பவருக்கு தகவல் தரவும் அல்லது ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 8185

## பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

பின்வரும் பாடங்களுக்கான அடுத்த தவணை பயிற்சியும் போதனையும் 3-9-1983 (சனிக்கிழமை) ஆரம்பமாகின்றன

1. கம்பியூட்டர் புறோகிறமிங் (3 பிரிவுகள்) செய்முறைப் பயிற்சி உட்பட புதிய கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும்.
2. மோட்டோர் மெக்கானிசம்
3. மின்சாரப் பொறியியல் டிப்பிளோமா
4. வெல்டிங் மற்றும்
5. ஆங்கில வகுப்புகள்

விண்ணப்பங்கள் அலுவலக நேரங்களில் எமது நிறுவனத்தில் பெறப்படும் படிவங்களில் தயாரிக்கப்பட்டு 31-8-83 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவாளர், பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ், 59, சென். பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

பதிவாளர்

(8182)

## தேவை

ஸ்பிறே பெயின்ரர், சேவிஸ் மன்—3 வருட அனுபவம் சான்றுப் பத்திரங்களுடன் உடன் வரவும். பரஸ்கோ, பருத்தித்துறைவீதி, நல்லூர். 8165

நற்குணமுடைய அனுபவமுள்ள கார்ச் சாரதி தேவை. தொடர்பு: அ. சுப்பிரமணியம், சட்டத்தரணி, 6/2. மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். 8179

கொப்பறா கொள்முதல் செய்கிறோம். தரத்திற்கேற்ப விலை நிர்ணயிக்கப்படும். விபரங்களுக்கு நேரடியாக தொடர்பு கொள்ளவும். மல்ரி ஓயில் இன்டஸ்றீஸ் லிமிட்டட் (ஆஸ்பத்திரி முன்பாக) K. K. S. வீதி, இணுவில் தொலைபேசி: 339 - (CKM) 8188

மணமகள் தேவை: யாழ்ப்பாண இந்து வேளாள 30வயது விசேட பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். குறிப்பு/புகைப்படம் ஒரே கடிதத்தில் முழுமையாக குறிப்பிடவும். உத்தியோகம் பார்ப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 8205, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 8205

## வகுப்புகள்

13—08—83 முதல் எமது கல்வி நிறுவனத்தின் வகுப்புகள் யாவும் வழமை போல் நடைபெறும். Welding, Wiring, Motor Mechanism ஆகிய நெறிகளுக்கான ஒரு மாத, மூன்றுமாத வகுப்புகளுக்கு புதிதாக விண்ணப்பித்தோரும், விண்ணப்பிக்கவிரும்புவோரும் உடன் தொடர்பு கொள்க: குறைந்த கட்டணம் அறவிடப்படும். J.E.C., 33. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 8178

## FOR SALE

Pure bred cocker spaniel pups, Alsatians and Love birds for sale. 22, Somasundaram Avenue, Chundikuli. 8196

## WANTED

Leading Mercantile Firm in Jaffna requires for immediate employment. A middle aged Book Keeper/Clerk capable of drafting Final Accounts. only those with atleast five years experience. apply in own handwriting Stating Salary expected to 484, Hospital Road, Jaffna. 8180

An energetic Field Canvassar for booking orders for popular brands of Office Equipments, Electric Tools, Agricultural Implements etc. Those possessing Motor Cycle preferred. Security and previous experience essential. Apply to 484, Hospital Road, Jaffna. 8181

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

## VACANCY

ASSISTANT DIRECTOR

Prospective candidate should have a degree in Electrical Engineering of a recognised university together with (a) a Charter of a recognised Engineering Institution or (b) Post graduate degree and minimum 8 years experience in an Executive post or Lecturer in Engineering graduate course.

Salary: Total remuneration will be about Rs. 3,220/- to 3,670/-per month all Inclusive.

Apply with full Bio-data and two refrees to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai on or before the 24th August 1983.

DIRECTOR

8201

## தேவை

FITTER / CHARGE HAND

நுட்பமான வேலைகளை விளங்கும் ஆற்றலும், இயந்திரங்களை உருவாக்குவதில் அனுபவமும் உள்ள பொருத்துனர்கள் பூரண விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.

## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

1. O/L, ஆரம்பமாகிவிட்டது DAY CLASS—(8.30 - 1.00)
   O/L 9, 8, 7, 6 (EVENING CLASS) (1.00-3.00)
2. (A/L) 83 DAY CLASS—(12-8-83) 7-30 A.M.
   (A/L) 85 EVENING CLASS (12-8-83)
3. A/L சனி, ஞாயிறு 13-8-83 (1.30-3.30)

(8190)

மாந்தைமேற்கு பல நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

4125 வெற்றுச் சாக்குகள் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திர அடிப்படையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 25-08-83

பொதுமுகாமையாளர்

மாந்தைமேற்கு பல. நோ. கூ. சங்கம், திருக்கேதீச்சரம்.

(8200)

## 90-வது நாள் நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி திலகர் அவர்கள்

பிரதம மேற்பார்வையாளர், யாழ்/அரசினர் வைத்தியசாலை


தோற்றம்: 3-12-1926 மறைவு: 4-6-1983

பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள், சகோதரர்கள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்,

141, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8189)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் சீனியர் துரைச்சாமி அவர்கள்

தோற்றம்: 1938 மறைவு: 24-8-1982

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் இருப்பிடமாய் சாந்த சொரூபியாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்பு எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது, உங்கள் ஆத்மா சந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி அன்னலட்சுமி

பிள்ளைகள் சிவகுமார், தேவகுமார். பவகுமார், சாந்தினிதேவி மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

கொழுவியங்கலட்டி,
மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி. (8204)

# இலங்கை வர முயன்ற 20 இந்தியர் கைது

(கொழும்பு)

இராமேஸ்வரத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு வரமுயற்சி செய்த சுமார் 20 இந்தியர்களைஇந்திய பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இத்தகவலை கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர் ஒருவரின் கேள்விக்குப்பதிலளித்த தகுதிவாய்ந்த அதிகாரி திரு. டக்ளஸ் லியனகே தெரிவித்தார்.

மதுரையிலிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் கோஷ்டியினர் தற்போது எங்கே இருக்கிறார்கள் என்பது பற்றிதமக்கு எதுவும் தகவல் இல்லை என்று தெரிவித்த திரு. லியனகே, சட்விரோதமாக இலங்கைக்கு எவரையும் வரவிடமாட்டோம் என இந்தியாஉறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில் தமிழக மாநில அரசுக்கு இந்திய மத்திய அரசு விடுத்துள்ள உத்தரவு ஒன்றில் சட்டவிரோதமாக பாக்குநீரிணையை கடக்க முயற்சிக்க எவரையும் அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுள்ளது.

## ஆசிரியர் தெரிவுப் பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை ஆசிரியர்களாகத் தெரிவு செய்வதற்காகச் செப்டம்பர் 12-ம் திகதி நடக்கவிருந்த பரீட்சை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஜனார்த்தனன் அ. தி. மு. க. விலிருந்து ராஜினமா!

(சென்னை)

தமிழக மேல்சபையின் முன்னாள் உறுப்பினரான திரு. இரா. ஜனார்த்தனன் அ. தி. மு. க.விலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக அ. தி. மு. கவைச் சேர்ந்த தமிழக அமைச்சர்கள் இருவர் தெரிவித்த கருத்தை கண்டித்தே அவர் அ. தி. மு. க.விலிருந்து ராஜினமாச் செய்வதாக தெரிவித்துள்ளார்.

தமிழக மேல்சபையின் அரச கொறடாவாக இருந்து வந்த திரு. ஜனார்த்தனன், சிலதினங்களுக்கு முன்னரே தமது பதவியையும் ராஜினமாச்செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஷப்ரு" வின் வழமையான அலுவல்கள் தற்பொழுது முன்னர் போல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதென்பதை சகலருக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

யாழ். கிளை காலை 8-00 மணி முதல் மாலை 3-30 மணி வரை திறந்திருக்கும்.

SHABRA UNICO FINANCE LTD.

61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு - 4
தொலைபேசி இல : 589310.

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 22073.

WE PROUDLY ANNOUNCE OUR APPOINTMENT AS DISTRIBUTORS FOR THE NORTHERN PROVINCE FOR THE UNDERMENTIONED PRODUCTS IMPORTED BY MESSRS. METROPOLITAN AGENCIES LTD. COLOMBO.

Please contact us for your requirements of any type of Office Equipments or Consumables

'Canon' — Photocopiers and Calculators
'Citizen' — Cash registers
'Optima' & Silver Reed — English Typewriters
'Haida' — Tamil Typewriters
'Ryobi' & 'Superfax' — Duplicating Machines
'Oce' 214 — Plan Printing Machines
'Fuji-Kiden' — Overhead Projectors
'Metse' — Steel Cabinets and Cupboards

All Machines carry One Year Guarantee.
Attractive discounts will be allowed to Traders.

CEYLON MERCHANTS LTD.
484, HOSPITAL ROAD, JAFFNA. — Phone : 22134

# இலங்கை மக்களுக்காக பாப்பரசர் பிரார்த்தனை!

வத்திக்கான், ஆக. 13

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இலங்கை மக்களின் நலனை முன்னிட்டு கடந்தமாதம் 31ந் திகதி விசேட வழிபாடொன்றை நிகழ்த்தினர். இத்தகவலை வத்திக்கான் பத்திரிகையான 'ரோமானே' வெளியிட்டது.

''இலங்கையில் தமிழ், சிங்கள இனத்தவரிடையே இடம்பெறும் வன்முறைகள் குறித்து நான் வேதனையடைகிறேன். இந்த இரு சமூகத்வரினதும் மதங்கள் புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. நாமும் அம் மக்களின் அமைதிக்காகவும், மனிதரின் அடிப்படை நீதி பேணப்படவும் பிரார்த்திப்போம்'' என்று தமது வழிபாட்டில் பாப்பரசர் குறிப்பிட்டார்.

பாப்பரசர் தமது வழிபாட்டுடன் உலகின் சகல கிறிஸ்தவ மக்களையும் இலங்கை மக்களின் அமைதிக்காகப் பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொண்டார். (கி)

## "பாதிக்கப்பட்ட ஊழியர்களை கச்சேரியில் வரவைப் பதிவுசெய்ய அனுமதிக்கவும்"

### மயிலணி கண்காணிப்புச் சபை யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''அண்மையில் இடம்பெற்ற கலவரங்களால் பாதிக்கப்பட்டு பிற இடங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு அகதிகளாக வருகை தந்துள்ள ஊழியர்கள் அந்தப் பகுதிகளுக்கு உடனடியாகச் செல்வது மிகவும் கடினம். எனவே இவர்கள் கடமை பார்க்கும் பகுதிகளில் போக்குவரத்து வசதிகள் வழமைக்குத் திரும்பும்வரை, அங்கு நிலைமைகள் சீராகஇருக்கின்றதென அவர்கள் திருப்திப்படும்வரைக்கும் கச்சேரியில் வந்து தங்கள் வரவைப் பதிவுசெய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும்''.

இவ்வாறு மயிலணி நலன்புரி கண்காணிப்புச் சபைச் செயலாளர் திரு. க. சின்னராசா யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவைக் கேட்டுள்ளார்.

''பாதிக்கப்பட்ட ஊழியர்களில் எவரேனும் தமது ஜூலை 1983 மாதச் சம்பளத்தை இதுவரை பெறுதிருந்தால் அவற்றைப் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்'' அவர் மேலும் கேட்டுள்ளார். (வெ)

# பாதிப்புற்ற மக்கள் விபரம் சேகரிப்பு

[சாவகச்சேரி]

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள ஆவணத்தொகுப்பு தகவல் ஆய்வு நிலையத்தினர் பாதிக்கப்பட்ட மக்களின் தகவல்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பணி முதலில் சாவகச்சேரித் தொகுதியில் உள்ள 23 கிராமசேவையாளர்கள் பிரிவில் உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய தொகுதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் தமது விபரங்களை ஆவணத்தொகுப்பு தகவல் ஆய்வு நிலையத்தாருக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். (கி)

## இன்று குருபூசை

(யாழ்ப்பாணம்)

சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தில்மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க ஆதரவில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும். (சு)

## பல்கலைக் கழக புதிய கல்விஆண்டு 84 ஜனவரியில்

(கொழும்பு)

பல்கலைக் கழகப் புதிய கல்வி ஆண்டு அடுத்த வருடம் ஜனவரி மாதம் இரண்டாந் திகதி ஆரம்பமாகின்றது.

பல்கலைக் கழக புதிய மாணவர்களுக்கென ஆரம்பிக்கப்படவிருந்த ஆங்கில வகுப்புகள் ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் 23ந் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள சகல மாணவர்களுக்கும் அவர்களின் அனுமதிக் கடிதங்கள் பதிவுத் தபால்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (கி)

## அகதிகள் நிதிக்கு ஒரு நாள் சம்பளம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தில் உள்ள 65 பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் தமது ஆகஸ்ட் மாதச் சம்பளத்தில் குறைந்தது ஒரு நாள் சம்பளத்தினை, அகதிகள் புனர்வாழ்வுத் திட்ட நிதிக்கு வழங்குவதாக அறிவித்துள்ளனர்.

அத்துடன், சாவகச்சேரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிகின்ற 130 கூட்டுறவு ஊழியர்களும். தமது ஒரு நாள் சம்பளத்தினை அகதிகள் நிதிக்கு வழங்க முன்வந்துள்ளனர். (கி)

யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)

போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

# சாட் குழப்பங்களில் அமெரிக்க தலையீடுஇல்லை

## அதிபர் றீகன் அறிவிப்பு

வாஷிங்டன், ஆக. 13

மத்திய ஆபிரிக்க நாடான சாட்டில் நீடிக்கும் குழப்பங்களில் அமெரிக்கா தலையிடுகின்றது என்ற குற்றச்சாட்டை அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் மறுத்துள்ளார்.

சாட் பிரச்னை குறித்து விளக்கமளிக்கப் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றை திரு. றீகன் வாஷிங்டனில் கூட்டினார். அம்மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு மறுப்புத் தெரிவித்தார்.

திரு. றீகன் மேலும் கூறியதாவது.-

''சாட் நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவை விட பிரான்ஸ் அதிக அக்கறை காட்டுவதுடன் அதிக செல்வாக்கும் கொண்டுள்ளது. எனவே, அமெரிக்கா அந்நாட்டுக்கு உதவவேண்டிய அவசியமில்லை.

''பிரான்ஸ்அமெரிக்காவுடன் சாட் நிலைவரங்கள்பற்றி அடிக்கடி ஆலோசனைகளை நடத்தும். ஆயினும் சாட்நாடு தொடர்பான பிரான்ஸின் திட்டவட்டமான கொள்கைகள் எதுவும் அமெரிக்காவுக்குத் தெரியாது'' என்றார்.

இதேவேளை சாட் அதிபர் ஹப்ரேக்கு எதிரான சக்திகள் லிபிய விமானப்படையின் துணையுடன் சாட்டின் வட பகுதியில் பயங்கரத் தாக்குதல்களை நடத்திவருகின்றன. இத்தாக்குதல்களால் இப்பகுதியில் உள்ள இராணுவ நிலைகள், பொதுமக்களின் குடியிருப்புகள் என்பன சேதமாக்கப்பட்டு வருகின்றன. பிரான்ஸ் அரசு ஹப்ரே அரசுக்கு ஆதரவாக அனுப்பியுள்ள இராணுவப் பிரிவு தற்போது சாட்டில் செயற்பட ஆரம்பித்துள்ளது. (கி)

# வேலணை முத்துமாரிஅம்மன் உற்சவம்

(வேலணை)

தீவுப்பகுதியில் மிக பழமை வாய்ந்ததும், சரித்திரப் பிரசித்தி பெற்றதுமான வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்தமகோற்சவம் இன்று 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24ம் திகதி புதன்கிழமை நடைபெறும் பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையவிருக்கின்றது.

உற்சவம் 12 மணிக்கு முன்னர் இரவுத் திருவிழாக்கள் இரவு 12மணிக்குள்ளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கோவில் முகாமையாளர் திரு. நாகரத்தினம் தெரிவித்துள்ளார்.

இக் கோவிலின் மகோற்சவ விசேட தினங்கள் வருமாறு:

14-ம் திகதி கொடியேற்றம், 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீ மிதிப்பு வைபவம், 22ம் திகதி திங்கட்கிழமை இரவு பெரிய சப்பறம், 23ம் திகதி காலை தேர் உற்சவம். அன்று மாலை தீர்த்தம், 24ம் திகதி பூங்காவனத்திருவிழா, 31ம் திகதி பொங்கல் விழாவுடன் உற்சவம் முடிவடையவிருக்கின்றது.

# வேலணை வெள்ளைக் கடற்கரையில் ரூ. $2\frac{1}{2}$ லட்சம் செலவில் நவீன நீச்சல் தடாகம்!

(வேலணை)

வேலணை வெள்ளைக் கடற்கரையில் இரண்டரை லட்சம் ரூபா செலவில் நவீன நீச்சல் தடாகமொன்று அமைக்கப்படவிருக்கின்றது.

இந்த நீச்சல் கேணியை அமைப்பதற்கெனப் பொதுமக்களால் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பொதுநிதியைக் கொண்டே இக்கேணி அமைக்கப்படவிருக்கின்றது.

குறிப்பாக இவ்விடத்தில் நல்ல தண்ணீர் இருப்பதாலும், அருகில் கடல் இருப்பதாலும் தீவுப்பகுதியில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் பொதுமக்கள் இங்கு வந்து குளித்துவிட்டுச் செல்லத்தக்கதான முறையில் இக்கேணி உதவும் என இக்கேணி அமைப்புச் சபையின் செயலாளர் தெரிவித்தார்.


சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
"ரெருசோ மாபிள் நிலம்"
அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்

**த ரெருசோ கொன்ருக்ரேஸ் & கொன்சல்ரன்ஸ்**

THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS

66 சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Specialist in Terrazzo Flooring According to CP 204


# கண்ணி வெடிக்கு இந்திய ராய்ட்டர் நிருபர்பலி

தெஹ்ரான், ஆக, 13

ஈரான்-ஈராக் போர் வலயப் பகுதிகளில் தகவல்களைச் சேகரிக்கச் சென்ற ராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் இந்திய நிருபரான ஹசன் என்பவர் கண்ணி வெடியொன்றுவெடித்ததனால் உயிரிழந்தார்.

இந்த நிருபர் போர்க்களப் பகுதிக்குப் புதியவர். வழமையாக இத் தகவல் சேகரிக்கும் பணியை விசேட ராய்ட்டர் நிருபர் ஒருவரே செய்துவந்தார். அந்நிருபருக்குப் பதிலாக தற்காலிகமாக இப் பணியை மேற்கொள்ளவே இந்த இந்திய நிருபர் போர்க்களப்பகுதிகளுக்கு வந்திருந்தார். நேற்று முன்தினம்தான் இந்தியாவிலிருந்து தெஹ்ரான் வந்திருந்தார்.

இந்திய நிருபர் ஹசனுடன் உதவிக்குச் சென்ற ஈரான் நபரொருவரும் அக்கண்ணி வெடி வெடித்ததால் கொல்லப்பட்டார். வேறு சிலர் காயமடைந்தனர். (கி)

# இன்று கிளிநொச்சி முருகன் உற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர அருள் மிகு முருகன் ஆலய கொடியேற்றத் திருவிழாஇன்று14ம்திகதிநடைபெறவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.


எங்கள் சகல வாடிக்கையாளர்களுக்கும்!

**ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ்**

61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு-4.

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நிரந்தர முதலீடுகளுக்கு தபால் மூலம் மாதாந்தம் வட்டிபெறும் சகலரும் எமது யாழ். கிளை அலுவலகத்தில் வட்டி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும்படி தயவாக கேட்டுக் கொள்ளுகின்றோம். வங்கி மூலம் வட்டியை பெறுபவர்கள் தொடர்ந்தும் அவ் நியதிப் பிரகாரம் அதனை பெறுவார்கள் என்பதையும் இத்தால்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.




# பாதிக்கப்பட்ட அகதிகள் விபரங்களைப் பதிய விசேடபடிவங்கள் விநியோகம்

## உதவி அரச அலுவலகங்களில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் இடம் பெயர்ந்தோர் விபரம் சேகரிக்கும் படிவங்கள் சகல பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் காரியாலயங்களுக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. யாழ். மாவட்டத்துக்கு வந்துள்ள இடம்பெயர்ந்தோர் அனைவரும் அப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து யாழ். அரசாங்க செயலக சமூக சேவைப்பகுதிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் இது பற்றி தெரிவிக்கலாம் என்றும் இதற்காக விசேட படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது;

சகல பாதிக்கப்பட்ட மக்களும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலோ அல்லது யாழ். கச்சேரியிலோ இப்படிவங்களைப் பெற்று தமது பாதிப்புக்கள் பற்றி தெரிவிக்குமாறும் முடிந்தளவு கூடுதலான தகவல்களையும், முடிந்தால் சான்றுகளையும் கொடுத்துதவுமாறு யாழ், அரசு அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை கடந்த மாதம் 24-ம் திகதிக்கு பின்னர் நடந்த கலவரங்கள் தொடர்பான முறைப்பாடுகளை நாட்டில் எந்த பொலிஸ் நிலையத்திலும் செய்து கொள்ளலாம். என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களையும், கொள்ளையர்களையும் கைது செய்ய உதவுமாறும் பொலிஸ் தலைமையகம் கேட்டுள்ளது.

இதுவரை மீட்கப்பட்ட பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகவும் அவை உரியவர்களிடம்சேர்க்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தார்.

## "பத்திரங்களை இழந்தவர்களுக்கு உதவுக"

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்து தமது பிரயாணப் பத்திரங்களை இழந்து தவிக்கும் மக்களுக்கு இப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்க உதவுமாறு மயிலணி நலன்புரி கண்காணிப்புச்சபை யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அச்சபை அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

''வெளிநாடுகளில் தொழில் பார்த்த பல தமிழ்மக்கள் விடுமுறைக்காக இலங்கை வந்து அண்மையில் நிகழ்ந்த கலவரத்தில் தங்கள் கடவைச்சீட்டுகள், அடையாளஅட்டைகள், பயணச்சீட்டுகள், மற்றும் முக்கியமான பத்திரங்களை இழந்து கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு அப்படியான பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கவேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கும்படி மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்''.

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சிறுபோக வேளாண்மை அறுவடைஆரம்பித்துள்ளது. இம்முறை சென்ற ஆண்டைவிடக் கூடுதல் விளைச்சல் கிடைக்கும் என விவசாய அதிகாரிகள் எதிர் பார்க்கின்றனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
பதிவு இலக்கம் 3774
இடம்பெயர்ந்த தமிழ் ஆசிரியர்களுக்கான
அறிவித்தல்

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ் ஆசிரியர்கள் அவர்களின் சொந்தமாவட்டத்திற்கு தற்காலிக இடமாற்றம் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் ஏனைய நிவாரணங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்க தலைமைப் பணிமனையில் திங்கள் (15-8-83) காலை 9-30 மணிக்கு சமுகமளிக்கவும்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

இ. த. ஆசிரிய சங்கப் பணிமனை,
29, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 8211

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-30
விஜயன் - சத்தியகலா
தனி மரம்

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
தியாகம்
(ஈஸ்ட்மென் கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதை வசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

ராணி (யாழ். நகர்)
10-3 , 2-30
கமலஹாசன் - அம்பிகா
சகலகலா வல்லவன்

றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

லிடோ (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)

## சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம் அகதிகளுக்கு ரூபா 10,000

(யாழ்ப்பாணம்)

கலவரங்களினால் உயிரிழந்து வீடு உடைமைகள் இழந்து பாதிக்கப்பட்ட அகதிகளை உபசரிப்பதற்கு சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் பத்தாயிரம் ரூபா வழங்க முடிவு செய்துள்ளது.

சுன்னாகம் ப. நோ. கூ, சங்கத்தின் இயக்குநர்சபைக் கூட்டம் நடைபெற்றபோது மேற் குறிப்பிட்ட முடிவு எடுக்கப்பட்டது.

இயக்குநர் சபைத் தலைவர் திரு. சி. குமாரவேல் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

'சங்க நடைமுறை லாபத்திலிருந்து 10 ஆயிரம் ரூபா வன்செயலால் பாதிக்கப்பட்டு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறையை வந்த அகதிகளை உபசரிப்பதற்கு கொடுக்க வேண்டும்' என்னும் பிரேரணையை திரு. பா. வைத்திலிங்கம் கொண்டுவந்தார். திரு, செ. இலகுநாதன் அதனை வழிமொழிந்ததும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அகால மரணமடைந்த புலோலி ப. நோ. கூ. சங்க மூன்று ஊழியர்களுக்கு தலா 1000 ரூபா வழங்குவதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (மா)

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

உடுவில் அரசினர் வைத்தியசாலையில் கடந்த நான்கு ஆண்டுகளாகப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் டாக்டர் எஸ். அப்பாத்துரை இம்மாதம் தொடக்கம் தமது பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இவர் நாட்டின் பல்வேறு அரசினர் வைத்தியசாலைகளிலும் 35 வருடங்கள் சேவையாற்றியுள்ளார்.

## இளைஞர் தற்கொலை

(கிளிநொச்சி)

இளைஞன் ஒருவர் மனவேதனையால் கிருமிநாசினி அருந்தி மரணமானார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சோறுவில் என்னும் இடத்தில் வசித்துவந்த மாரிமுத்து சுப்பிரமணியம் (36 வயது) என்பவரே மரணமானவராவார்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிசைச் சேர்ந்த ஜனுப் ஆர். ரி. பரீத் ஆஜர் செய்தார்.

தான் வேலைசெய்யும் வயலுக்கு சென்று கிருமிநாசினியை அருந்தி மரணமானார் என மரணவிசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது. மரண விசாரணை அதிகாரி யோகலிங்கம் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகள் குருபூசை விழாவை அமைதியாகக் கொண்டாடவுள்ளனர்.

இன்று காலை 6 மணி முதல் திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீவாலை அம்மன் ஆலயத்தில் குருபூசையும் மௌனபிரார்த்தனையும் இடம்பெறும்

விசேட அறிவித்தல்

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்டில் இம்மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகவிருந்த புதிய வகுப்புகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

★ ஆசிரியர் திரு. T. N. பஞ்சாட்சரம் அவர்களின்
INTENSIVE
SPOKEN ENGLISH COURSE
ஆரம்பம்:- 20 - 8 - 83

★ விஞ்ஞானம், கணிதம், மனையியல், விவசாயம்
ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சைக்குரிய
விசேட வகுப்புகள்
ஆரம்பம்:- 15 - 8 - 83

விபரங்களுக்கு:- நேரில் / தபாலில்
ASTAN INSTITUTE
166 1,. HOSPITAL ROAD JAFFNA

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர
நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 23199 தந்தி: 'வைரம்'

வீடு உங்களுக்கு.... சிரமங்கள் எங்களுக்கு!
எங்கள் பொறியியலாளர்களுடன் சேர்ந்து உங்கள் வீடுகளைத் திட்டமிடுங்கள்
அவர்களுடன் சேர்ந்தே உங்கள் வீடுகளைத் திறம்பட நிர்மாணியுங்கள்.
★ திட்டமிடல் ★ படம் வரைதல் ★ கணக்கிடல்
★ நிர்மாணித்தல் ★ புனரமைத்தல்
★ நவீனவசதிகளுடன் கூடிய சிக்கன வீடுகள் (low cost housing) அமைத்தல்.
செலவையும் சிரமத்தையும் குறைத்து, தரத்தினை உயர்த்த எம்மைக் கலந்தாலோசியுங்கள். அல்லது உங்கள் விலாசத்தை அறிவித்தால் எமது பொறியியலாளர் உங்களுடன் நேரில் தொடர்பு கொள்வார்.
டைனமிக்
என்ஜினியரிங் லிமிற்றெட்
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.

(இன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைத்தினம்)

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

நேசம் நிறைந்த உள்ளத்தால் நிலம் நிறைந்த
மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும்
தொழ எடுத்து
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன்
பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க வந்த பிறப்பை
வணங்குவாம்.

— பெரியபுராணம்

## வேலை இழந்தனர்

(மானிப்பாய்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கடந்த மாதம் 25ம் திகதிமுதல் தற்காலிக ஊழியர்கள் பலர் வேலையிழந்துள்ளனர்.

மின்சார விநியோகப் பற்றுக் குறை, டீசல் எண்ணைபற்றுக் குறைஆகியன காரணமாக இத் தொழிற்சாலையின் ஒருபகுதி சீராக இயங்க முடியாத நிலையிலிருப்பதாலேயே இவ்விதம் இவர்கள் வேலையிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## புடவைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இணுவிலிலுள்ள புடவை விற்பனவு நிலையத்தில் உடு புடவைகள் திருடப்பட்டுள்ளன.

இணுவிலிலுள்ள மரத் தொழிற்சாலையில் வைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப உபகரணங்களை எடுத்த திருடர்கள் சற்றுத் தொலைவிலுள்ள புடவைக்கடையை உடைத்து, உடுபிடவைகளைத் திருடியதாகவும் பின்னர் பக்கத்திலுள்ள மேலும் ஒரு கடையை உடைத்து அங்கிருந்த குளிர் பானங்களை மாத்திரம்குடித்துவிட்டு, தப்பிச்சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னுகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## பண்டத்தரிப்பில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியில் சமீப நாட்களாக சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் தங்கள் சைக்கிள்கள் மீது மிகுந்த கவனமாக இருக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

தினசரி ஒரு சைக்கிள் வீதம் இங்கு களவாடப்படுவதாகவும் கோஷ்டி ஒன்றே இக்களவை திட்டமிட்டு நடாத்திவருவதாகவும் அறியப்படுகின்றது.

# பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொலை: 7 இளைஞர்கள் ரிமாண்டில்

(கொழும்பு)

பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். சுப்பிரமணியம் கொலைச் சம்பவம் தொடர்பாக வெள்ளவத்தையைச் சேர்ந்த 7 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஜூலை 25ம் தேதி இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியம் தாக்கப்பட்டு, குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

கைதான சந்தேகநபர்களான 7 இளைஞர்களும், கல்கிசை நீதவான் திரு. திஸ எக்கநாயக்கா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்,

சந்தேகநபர்களை ஆஜர் செய்த பொலிஸ் சார்ஜண்ட் ரணவீர, விசாரணை பூர்த்தியாகாததினுல், அவர்களை ரிமாண்டில் வைக்குமாறு கோரியதைத் தொடர்ந்து நீதவான் ஆகஸ்ட் 25வரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். (சு)

## வட்டமேசை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் உள்நாட்டுவிவகாரங்களில் இந்தியா ஒருபோதும் தலையிடமாட்டாது.

இதேவேளை இந்திய அரசியல் பிரமுகர்களும், நாட்டு மக்களும் முக்கியமாக ஒரு விடயத்தை மனதில் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் இலங்கை அரசின் நலன்களைப்பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கை ஜனுதிபதி திரு. ஜயவர்த்தன இலங்கையின் நிலைபரம் குறித்து நேரில் வந்து அறியும் வகையில் இந்திய நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் குழுவொன்றை இலங்கை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன தெரிவித்த கருத்தில் இலங்கை அரசின் நலன்களையும், அபிலாஷைகளையும் பாதிக்காத விதத்தில் இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிடுவதை இலங்கை ஜனுதிபதி அனுமதிப்பார்'' என்று கூறினுர்.

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று லோக்சபாவில் இலங்கை பிரதிநிதியுடன் நடத்திய பேச்சுக்கள்பற்றி சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## ஏற்புவலியினுல் மரணம்

(பண்டத்தரிப்பு)

காலில் இரும்பு ஆணி ஒன்று குத்தியதை அடுத்து ஏற்பட்ட ஏற்புநோய் காரணமாக பண்ணுகத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் அ. சுப்பிரமணியம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்,

புத்தளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தில்தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் வவனியாவிலுள்ள தமது இல்லத்தில் இருந்தபோது இரும்பு ஆணியொன்று இவரது காலில் குத்தியதாகவும் உடனடியாக வலிப்பும் காய்ச்சலும் ஏற்பட்டதினுல் வவனியா அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கு நோய் மிகவும் அதிகரிக்கவே யாழ் அரசினர்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியில் அனுப்பிவைக்கப்பட்டதாகவும், அங்கு அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் அவர் மரணமானதாகவும், இம்மரணம தொடர்பாக யாழ். அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் ஏற்புவலி நோயினுல் ஏற்பட்ட மரணம் என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர். யாழ். அரசினர் வைத்தியசாலை பொலிஸ் பகுதியினர் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

# “தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடிக்க அரசால் முடியும்!”

## பாதுகாப்பு அதிகாரிகள் நம்பிக்கை

(கொழும்பு)

வடபகுதித் தீவிரவாதிகளின் எந்தவித தாக்குதலையும் முறியடிக்க முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் ஆயுதபலம் பற்றியும் தமக்கு நன்குதெரியும் என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவிள்ளதாக ராஜாங்க அமைச்சின் செலாளரும் தகுதிவாய்ந்த அதிகாரியுமான திரு. டக்ளஸ் லியனகே தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தகவல் தருகையில் தெரிவித்தார்.

'நாட்டில் பதட்டநிலையை ஏற்படுத்த தீயசக்திகள் சில இப்போதும் செயற்பட்டு வருவதாகவும் வீண் வதந்திகளை கேட்டுப்பதட்டமடையக் கூடாது என்றுர்.

வடபகுதியில் காணப்படும் சுவரொட்டிகள் பற்றி கூறிய அவர் இவை கொழும்பிலிருந்து செல்லும் தமிழ்மக்களைக் கவரும் வகையிலேயே இருக்கின்றன என்று கூறினுர் அது பற்றி மேலும் கூறியதாவது.

''இந்த சுவரொட்டிகளில் யாழ்ப்பாண மக்களுக்கு பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு திகதிகள் குறிப்பிடப்பட்டு அத்திகதிக்குள் கொழும்பிலுள்ள மக்கள் திரும்பிவிடவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

''கொரில்லாத் தாக்குதல்கள் எப்போதும் அடித்துவிட்டு ஓடுகின்ற வகையிலேயே அமைந்திருக்கின்றன. திகதி குறிப்பிட்டு ஒருபோதும்தாக்குதல்கள் நிகழ்த்தப்படுவதில்லை, வடக்கில் இப்போதும் இராணுவ நிலையே இருக்கிறது ஆனுல் கொழும்பில் அப்படியல்ல. வடக்கில் ஒரு நோக்கத்திற்காக விடுக்கப்படும் எச்சரிக்கை தெற்கில் அது வேறு நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன.''

## வெங்காயம் விலை சரிவு!

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சின்ன வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை பருப்பு, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வடபகுதிசென்ற கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் லொறிகள் திரும்பிவரும்போது சின்ன வெங்காயத்தை ஏற்றி வந்ததாலேயே திடீரென விலை குறைந்துள்ளது.

70 தொன் சின்ன வெங்காயம் இந்த லொறிகள்மூலம் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தது. பின்னர் இங்கிருந்து காலி, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (கு)

## படகுசேவை விஸ்தரிப்பு

(நெடுந்தீவு)

ஊர்காவற்றுறை-நயினுதீவு படகுச்சேவை தற்சமயம் எழுவைதீவுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், வடபிரதேச இயந்திரப் பொறியியலாளர் திரு. என். நித்தியானந்தன் ஆகியோர் எழுவைதீவு மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு மேற்படி படகுச் சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்

### கனகசபை சிவபாலரத்தினம்

கொழும்பு பிறவுண்ஸ் வர்த்தக நிலையத்தில் கணக்கு ஆய்வாளராகக் கடமைபுரிந்துவரும் கனகசபை சிவபாலரத்தினம் 10-8-83இல் காலமாகி மல்லாகம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டுள்ளார். உற்ருர் உறவினர் நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி சரோஜினிதேவி
சிவபாலரத்தினம், பிள்ளைகள்
7ம் கட்டை ஒழுங்கை, மல்லாகம்

8212

## மரண அறிவித்தல்

### A. G. ராஜசூரியர்—பிரபாராஜசூரியர்

திரு. A. G. ராஜசூரியர் அவரது மகன் பிரபாராஜசூரியர் அகால மரணம் அடைந்துள்ளனர். இவர்கள் காலஞ்சென்ற திருமதி யோசபீன் என்பவரின் அன்புக் கணவரும்-மகனும், சிறிதரன் அனுஷா, கெனடி, ஷோபித்தா ஆகியோரின் ஆருயிர் தந்தையும்-சகோதரரும், ஜெயராஜ் சிற்றம்பலத்தின் அன்பு மாமனுரும்-மைத்துனரும் ஆவார்கள். ஈமச்சடங்குகள் 15-8-83 திங்கள் மாலை 4-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக அர்ச். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 645/9, பீச் ரோட், யாழ்ப்பாணம். 8203

## அகதிகளுக்கு உணவுப் பொருட்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் அகதிகளுக்கு உதவு முகமாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. செபநாயகம் தலைமையில், உடுவில் பிரதேச சபைத்தலைவர் திரு. செ. இலகுநாதன், இணுவில் சமாதான சபைத்தலைவர் திரு. சி. சண்முகலிங்கம் ஆகியோர் உப உணவுப்பொருட்களையும் வழங்கினர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அகதிகள் முகாமில் வைத்து இவ்வுணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம் 14-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49. Telephone: 22389—24126.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை சங்கரசிவம்

(P. V. உம்புச்சி)



தோற்றம்: 04-6-1934

மறைவு: 29-07-1983

93, புதுச்செட்டித்தெரு, கொழும்பைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் பொ. சங்கரசிவம் 29-07-83 (வெள்ளிக்கிழமை) அகாலமரணமானுர்.

இவர் கொக்குவில் மேற்கு சாஸ்திரி பொன்னுத்துரை-அரசரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், லீலாவின் அன்புக் கணவரும், ஜெயனி கங்கேஸ்வரியின் பாசத்தந்தையும், சண்முகலிங்கம், Dr. பரமலிங்கம், விக்னேஸ்வரன், சீதாலட்சுமி, கமலாம்பிகை மகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

ஈமக்கிரியைகள் முடிவுற்றன. உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

சாஸ்திரி பொன்னுத்துரை
குடும்பத்தினர்

மேற்கு கொக்குவில் 8207